# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 09.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.13742/F/2024**

திரு S. பாஸ்கர் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு, .. பொது அதிகார அமைப்பு
குரங்குச்சாவடி, சேலம் மாவட்டம் - 636 004.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 03.06.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 20.06.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 19.07.2024 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 27.08.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 22.10.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திரு S. பாஸ்கர் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு மு. முத்துக்குமரன், கோட்டப்பொறியாளர், கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சேலம் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சேலம் மாவட்டம், கோட்டப்பொறியாளர் அலுவலகம்-I, [க(ம)ப] நெடுஞ்சாலை அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், சேலம் நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டத்திற்குட்பட்ட சேலம் தெற்கு வட்டம், ஆட்டையாம்பட்டி கிராமம், ஆட்டையாம்பட்டியிலிருந்து சேலம் செல்லும் மெயின்ரோடு [SH 86A] (மின்சங்கு எதிரில்) இருந்த சுமார் 45 வயதுடைய 13.05.2024 அன்று காற்றில் விழுந்த பலன்தரும் சீனியரேஜ் மதிப்பில் முதல் வகுப்பு வேப்பமரம் நெடுஞ்சாலைத் துறையினரால் அகற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு வனத்துறை சட்டம் 1882 மற்றும் மக்கள் சாசனம்-2011, People

Charter 2011-ன்படி மேற்படி அகற்றப்பட வேப்பமரத்துக்கு பெறப்பட்ட வனத்துறை படிவம்-2 அனுமதி சீட்டின் சான்றிட்ட நகல், மேற்படி அகற்றப்பட்ட மரம் ஏலத்தின் ஏல அறிவிப்பின் நகல், மேற்படி அகற்றப்பட்ட மர ஏலத்தின் பொது ஏல தேதி நிர்ணயம் செய்த அலுவலரின் முழு விவரம், மேற்படி அகற்றப்பட்ட மர ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்களின் முழு விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 10 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தான் கோரிய தகவல்களை ந.க.எண்.1083/2024/இவஅ1 நாள் 20.06.2024 தேதியிட்டு ஏற்கெனவே பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக தனக்கு வழங்கிவிட்டதாக இன்றைய விசாரணையின்போது ஆணையத்தில் தெரிவித்து, தனது வழக்கினை முடித்துக்கொள்ளுமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார். ஆணையம் அதனை பதிவு செய்து, மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.13742/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு,
குரங்குச்சாவடி, சேலம் மாவட்டம் - 636 004.

**<u>வழக்கு எண்.SA.13742/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு S. பாஸ்கர், த/பெ. சண்முகம்,
எண்.32, மாரி வீதி,
ஆட்டையாம்பட்டி (அஞ்சல்),
சேலம் - 637 501.

Copy to: File
SNPS / 11.04.2025